

## சட்ட உதவித் துறையின் இடம் மற்றும் அலுவல் நேரம்

### சிவில் சட்ட உதவி விண்ணப்பம்:

**ஹாங்காங் ஆபீஸ்:**
25/F குவீன்ஸ்வே கவர்ன்மெண்ட் ஆபீஸஸ், 66 குவீன்ஸ்வே, ஹாங்காங் (தொலைபேசி: 2537-7661)

**கவுலூன் ஆபீஸ்:**
G/F மாங்காக் கவர்ன்மெண்ட் ஆபீஸஸ், 30 லுவென் வான் ஸ்ட்ரீட், மாங்காக், கவுலூன் (தொலைபேசி: 2380-0117).

**அலுவல் நேரம்:**

| | |
|---|---|
| திங்கள் முதல் வியாழன் வரை | காலை 8:45 மணி முதல் மதியம் 1:00 வரை |
| | காலை 2:00 மணி முதல் மாலை 5:45 வரை |
| வெள்ளி | காலை 8:30 மணி முதல் மதியம் 1:00 வரை |
| | காலை 2:00 மணி முதல் மாலை 6:00 வரை |

### குற்றவியல் சட்ட உதவி விண்ணப்பம்:
25/F குவீன்ஸ்வே கவர்ன்மெண்ட் ஆபீஸஸ், 66 குவீன்ஸ்வே, ஹாங்காங் (தொலைபேசி: 2537-7738)

**அலுவல் நேரம்:**

| | |
|---|---|
| திங்கள் முதல் வியாழன் வரை | காலை 8:45 மணி முதல் மதியம் 1:00 வரை |
| | காலை 2:00 மணி முதல் மாலை 5:45 வரை |
| வெள்ளி | காலை 8:30 மணி முதல் மதியம் 1:00 வரை |
| | காலை 2:00 மணி முதல் மாலை 6:00 வரை |

01/2017
Published by the Legal Aid Department
Printed by the Government Logistics Department

# ஹாங்காங்கில் சட்ட உதவி சேவைகள்

(Tamil Version)

法律援助署



## சட்ட உதவி
நீதிமன்ற வழக்குகளின் போது ஒரு வழக்கறிஞரை தனக்காக பிரதிநிதித்துவம் செய்வதற்காக அமர்த்திக் கொள்ள பணம் செலுத்த வசதியில்லாதவர்களுக்கு சட்ட உதவி அதைச் செய்து கொள்ள வழிவகை செய்கிறது.

## சட்ட உதவி இலாகா
சட்ட உதவி இலாகா ("இலாகா"), ஹாங்காங்கில் சிவில் அல்லது குற்ற சம்பந்தமான வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவோ அல்லது அவற்றில் தற்காத்துக் கொள்ளவோ விரும்பும் எந்த ஒரு நபருக்கும் சட்ட உதவி வழங்குகிறது. ஒருவரது வருவாய் குறிப்பிட்ட வரம்புக்குட்பட்டு இருந்து ஒரு நியாயமான வாதத்தைக் கொண்டிருப்பின் அவர் சட்ட உதவி பெறத் தகுதி உடையவராகிறார்.

சட்ட உதவியைப் பெற விண்ணப்பிப்பதற்காக எந்த ஒரு கட்டணமும் கிடையாது. சட்ட உதவி வழங்கப்படுமிடத்து, ஒரு வழக்கறிஞரை உதவி பெற்ற நபருக்கு வழக்கைக் கையாள இலாகா ஏற்பாடு செய்யும்.

## சிவில் சட்ட உதவி
மாவட்ட நீதிமன்றம், முதல்நிலை அதிகார வரம்புள்ள நீதிமன்றம், மேல் முறையீட்டுக்கான நீதிமன்றம் மற்றும் இறுதி மேல் முறையீட்டுக்கான நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குகளுக்காக சட்ட உதவி கிடைக்கப்பெறும். இதில் உள்ளடங்கியுள்ள வழக்கு வகைகளில் விவாகரத்து மற்றும் குடும்ப சம்பந்தமான கருத்து வேறுபாடுகள், தனி நபர் சேதத்திற்கான உரிமை கோரிக்கைகள் (எடுத்துக்காட்டாக பணி இடங்களில் ஏற்படும் அல்லது சாலை விபத்துக்களால் எழும் உரிமை கோரிக்கைகள்), பணி சம்பந்தமான கருத்து வேறுபாடுகள், ஊதிய உரிமை கோரிக்கைகள் மற்றும் குடியேற்ற சம்பந்தமான விஷயங்கள் ஆகியவையும் அடங்கும்.

## குற்ற சம்பந்தமான சட்ட உதவி
குற்ற சம்பந்தமான சட்ட உதவியில் மாவட்ட நீதிமன்றம், முதல்நிலை அதிகார வரம்புள்ள நீதி மன்றம் மற்றும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் மேல் முறையீட்டுக்கான நீதிமன்றம் மற்றும் இறுதி மேல் முறையீட்டுக்கான நீதிமன்றம் ஆகியவற்றில் உள்ள குற்ற சம்பந்தமான விசாரணைகள் உள்ளிட்டவை அடங்கும்.

## சட்ட உதவி இலவசமாக இருக்காது
சட்ட உதவிக்கு அரசாங்கம் நிதி அளிக்கிறது. மேலும் இது இலவசம் இல்லை.

சட்ட உதவிக்கான வெற்றிகரமான விண்ணப்பதாரர் சட்ட உதவி வழங்கப்படும் சமயத்தில் தங்களது நிதிநிலைமை சூழ்நிலைகளைப் பொறுத்து ஒரு நன்கொடையை அளிக்க வேண்டியிருக்கும்.

சட்ட உதவியைப் பெறும் நபர் வழக்கின் விளைவாக பணம்/ சொத்து அடைந்தாலோ அல்லது தங்களிடம் வைத்திருந்தாலோ தனது வழக்கினால் ஏற்பட்ட சட்ட சம்பந்தமான செலவுகளில் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ தரவும் கோரப்படுவார்.

## சட்ட உதவிக்கு எப்படி விண்ணப்பிப்பது
சிவில் அல்லது குற்ற சம்பந்தமான சட்ட உதவிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒருவர் இலாகாவின் அலுவலகங்களுக்கு வருகை புரிய வேண்டும்.

சிவில் சட்ட உதவிக்காக விண்ணப்பிக்க விரும்பும் ஒருவர் 18 வயதோ அல்லது அதற்குக் கீழ்ப்பட்டிருந்தாலோ அல்லது மனநலம் இல்லாதவராக இருந்தாலோ, விண்ணப்பம் அவரது சார்பாக ஒரு வயது வந்தவரால் செய்யப்பட வேண்டும்.

## மொழிபெயர்ப் புடன் உதவி
ஒரு விண்ணப்பதாரிச்கு சீன மொழி அல்லது ஆங்கிலம் பேச முடியா தென்றால், இந்த இலாசா இந்த விண்ணப்ப செயர்பாங்கு செய்ய உதவ ஒரு மொழி பெயர்ப் பாளரின் சேவையை இலவச மாச ஏற்பாடு செய்ய முடியம். அந்த தேவைப் பட்ட ஏற்பாடுசுளை செய்ய தயவு செய்து எங்சுள் முன்னிலை அலுவலரை தொடர்பு சொள்ளவும்